+2பாடத்தில் மாநில அளவில் முதலிடம் பெற்ற மாணவி நந்தினிக்கு திண்டுக்கல்லில் அவரது வீட்டில் கவிப்பேரரசு வைரமுத்து தங்கப்பேனா பரிசு வழங்கி பாராட்டினார்.

நெல்லை மாவட்டம் கொக்கிரகுளத்தில் ரூபாய் 5 கோடி மதிப்பில் வண்ண மீன் காட்சியகம் மற்றும் வண்ண மீன் சில்லறை விற்பனையகம் நிறுவும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்வு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் தலைமையில் அமைச்சர் ராஜகண்ணப்பன் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கால்நடை பராமரிப்பு துறை மற்றும் மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் பங்கேற்று அடிக்கல் நாட்டினார். நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டச் செயலாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ ஞானதிரவியம் எம்.பி.மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மேயர் சரவணன், மாநகராட்சி ஆணையர் சிவ கிருஷ்ணமூர்த்தி,துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ், மண்டல தலைவர் ரேவதி,மீனவர் நலத்துறை இணை இயக்குனர் அமல் சேவியர், மீன்பிடி துறைமுகம் திட்ட கோட்ட செயற் பொறியாளர் சரவணகுமார்,மீனவர் நலத்துறை உதவி இயக்குனர் புஷ்ராஷப்னம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஆட்சியில் அமர்ந்து இரண்டே ஆண்டுகளில்

அகில இந்திய அரசியலில் சாதித்துக் காட்டியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

நெல்லை பொதுக்கூட்டத்தில் அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

நெல்லை,மே.12-

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான "திராவிட மாடல்" அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நெல்லை டவுண் குளப்பிறை தெருவில் நெல்லை மத்திய மாவட்டச் செயலாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக பொது செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் மாநில கொள்கை பரப்பு செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி.ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு முதலமைச்சர்-கழகத் தலைவர் அவர்களின் உத்தரவுக்கிணங்க கழக அரசின் "திராவிட மாடல்" ஆட்சியின் 2 ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் தமிழ்நாடு முழுவதும் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதன்படி நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் நெல்லை டவுன் குளப்பிறை தெருவில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தலைமையிலான "திராவிட மாடல்" ஆட்சியின் 2 ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நெல்லை மத்திய மாவட்ட செயலாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ தலைமையில்,சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் மைதீன்கான், நெல்லை மாநகராட்சி மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன்,தச்சை பகுதி செயலாளர் சுப்பிரமணியன், பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை,மேலப்பாளையம் பகுதி செயலாளர் சாகுல்ஹமீது,நெல்லை மத்திய மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் வரவேற்புரையாற்றினார்.நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் கழக பொதுச்செயலாளரும்,நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் பங்கேற்று பேசியதாவது:-

கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான அரசு அமைந்து 2 ஆண்டுகள் நிறைவு பெற்று 3ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம்.நெல்லை மாநகர சீமையில் இந்த சிறப்பான கூட்டம் நடைபெறுகிறது. நீண்ட நாட்களுக்கு பிறகு நெல்லையில் பேச எனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அரசியல் வரலாற்றில் அதிகமாக நான் பேசியது நெல்லையில் தான் கல்லூரி மாணவனாக இருந்த போதே இங்கு வந்து பேசினேன்.அதிகமான அணைகளை இந்த மாவட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் ஆசியோடு கட்டினேன்.அது போன்று கன்னியாகுமரி தென்காசி மாவட்டங்களிலும் பல அணைகள் கட்டப்பட்டது. தமிழ்நாட்டில் பாலாறு, வைகை ஆறுகாவிரி ஆறு, கொடுமுடி ஆறு போன்றவை அனைத்தும் வேறு மாநிலங்களில் தோன்றியது. எல்லா மாநிலங்களிலும் தகராறு.

சாதித்துக் காட்டிய முதலமைச்சர்!

ஆனால் சொந்தமாக தோன்றிய இதே மாவட்டத்தில் கடலில் கலக்கக்கூடிய ஒரே ஆறு தாமிரபரணி ஆறு மட்டும் தான்.இது தான் தமிழ்நாட்டின் ஆறு, நம்முடைய ஆறு என்று பெருமைப்பட கூடியது. தமிழகத்தில் முதல் நதிநீர் இணைப்பு திட்டம் நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணி ஆறு, நம்பியாறு,கருமேனியாறு ஆகிய ஆறுகளை இணைக்கும் வகையில் வறட்சி பகுதிகளை செழிக்க செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் கொண்டுவரப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில் இந்த திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டனர். மீண்டும் அந்தத் திட்டம் தூசு தட்டப்பட்டு பணிகள் விரைவுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் தாமிரபரணி கருமேனி, ஆறு,நம்பியாறு நதிநீர் இணைப்பு பணிகள் முடிவடையும்.

இப்போது நமக்கு எதிரிகளே இல்லை, எதிர்க்கட்சித் தலைவராக ஆளுநர் தான் செயல்படுகிறார்.இ.பி.எஸ். சிவனே என்று இருக்கிறார். ஓ.பி.எஸ். எங்கு இருக்கிறார் என்றே தெரியவில்லை.எதிரியே இல்லாத ஒரு அரசியல் நடத்துகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். பாய்கின்ற வேகத்தை தளபதி வைத்துள்ளார்.சாதனைகள் இரண்டு வகை உண்டு மக்களுக்கு திட்டம் தீட்டி அதனை மக்களிடம் சேர்ப்பது ஒருவகை. ஆட்சியில் அமர்ந்து அகில இந்திய அரசியலில் சாதித்துக் காட்டுவது இன்னொரு வகை. இதை இரண்டுமே முதலமைச்சர் செய்து சாதித்து காட்டியுள்ளார்.

தலைவர் கலைஞர் அவர்கள் அகில இந்திய அரசியலில் சாதித்துக் காட்ட 10 முதல் 15 ஆண்டு

கள் ஆனது. ஆனால் தளபதி முதலமைச்சராக பொறுப்பேற்று இரண்டு ஆண்டு காலத்திலேயே இந்தியாவில் குறிப்பிடத்தக்க தலைவராக இருக்கிறார். நீண்ட ஆண்டு காலம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களாக இருப்பவர்கள் கூட இந்தியாவின் அரசியலுக்கு நீர் தான் வழி காட்ட வேண்டும் என்று சொல்லும் நிலையை இரண்டு ஆண்டுகளில் முதலமைச்சர் கொண்டுவந்துள்ளார். எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வும் நாங்கள் இரண்டு ஆண்டுகளில் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்லவில்லை,எதிரியான பா.ஜ.க. கூட நாங்கள் இரண்டு ஆண்டுகளில் ஒன்றும் செய்யவில்லை என சொல்லவில்லை.தளபதி இரண்டு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க மனிதராக காட்டியிருக்கிறார்.ஆனால் ஒரே ஒரு ஆள் மட்டும் நாங்கள் ஒன்றும் செய்யவில்லை என சொல்லி வருகிறார் அவர்தான் ரவி தமிழகத்தின் கவர்னர்.

சட்டமன்றத்தில் அரசின் திட்டங்கள் உள்ளிட்டவைகள் அடங்கிய உரையை அரசு தரப்பில் எழுதிக் கொடுக்கப்படும். அதனை ஆளுநர் படித்து பார்த்து அவருடைய ஒப்புதல் பெற்ற பின்னரே சட்ட மன்றத்திற்கு வரும்.அதனை அவர் வாசிப்பார் ஆனால் ஆளுநர் கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் உரை நிகழ்த்திய போது பல வரிகளை விட்டுவிட்டு படித்தார், இல்லாத பல தகவல்களையும் சேர்த்து படித்தார். சபையில் கண்ணியம் காக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர் உரை முடியும் வரை யாரும் எதுவும் செய்யக் கூடாது என முதலமைச்சர் உத்தரவிட்டார். அதன்படியே நாங்களும் இருந்தோம் அவர் உரை முடித்த பின்னரே முதலமைச்சர் எழுந்து பேசினார். அதுவும் பொறுக்காமல் ஆளுநரே சபையை விட்டு வெளியேறினார்.அரசு எழுதிக் கொடுத்த அனைத்தையும் எப்படி படிக்க முடியும் என ஆளுநர் தனியார் பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் சொல்லி உள்ளார். அது அவர் தலையெழுத்து இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 176இன் படி ஆளுநர் அரசுக்கு கொடுக்கும் உரையை கட்டாயம் படித்து ஆக வேண்டும். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை என ஆளுநர் சொல்கிறார்.

தமிழ்நாடு அமைதிப் பூங்கா!

ஆனால் உச்சநீதிமன்ற நீதிபதி சந்திர சூட் இந்தியாவிலேயே தமிழகம் அமைதி பூங்காவாக உள்ளது என சொல்லுகிறார் நாங்கள் நீதிபதி சொன்னதை ஏற்க வேண்டுமா, ஆளுநர் சொல்வதை கேட்க வேண்டுமா என தெரியவில்லை. பெட்டிக் கடைக்கு கூட லாயக்கு இல்லாதவர் தமிழகத்தின் ஆளுநர்.

உலகிலேயே எகிப்து நாடு அலெக்சாண்ட்ரியாவில் தான் பெரிய நூலகம் உள்ளது அதை சுற்றி பார்க்க 10 நாளாகும்.அடுத்து சிங்கப்பூரில் உள்ளது இப்போது மதுரையில் நாம் நூலகம் கட்டிக் கொண்டிருக்கிறோம். மதுரையில் அமைய உள்ள நூலகத்தில் தமிழ் மற்றும் ஆங்கில புத்தகங்கள் மட்டுமே இருப்பதாக ஆளுநர் சொல்லுகிறார். சூசகமாக ஹிந்தி புத்தகம் இல்லை என்பதை ஆளுனர் சொல்லிக் காட்டுகிறார். தமிழகத்தில் உள்ள அதிகாரிகள் குழுவை அனுப்பி பார்வையிட்டு அதுபோல் ஒரு நூலகத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் மதுரையில் ஒரு நூலகத்தை கட்டிக் கொண்டு தான் இருக்கிறோம்.நூலகத்தில் யாராவது புத்தகங்களை வைக்க மறுப்பார்களா அனைத்து மொழி புத்தகங்கள் நூலகத்தில் வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. என்னிடம் எந்த மசோதாக்களும் நிலுவையில் இல்லை என ஆளுநர் பொய் சொல்கிறார். 15க்கும் மேற்பட்ட மசோதாக்கள் ஒப்புதல் வழங்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. எங்களையும் ஆளுநர் மதிக்கவில்லை,அரசியல் அமைப்பு சட்டத்தையும் ஆளுநர் மதிக்கவில்லை. எங்களை எதிரிகளை போல் பார்த்து வருகிறார்.அவர் பதவியை ராஜினாமா செய்து விட்டு இடை தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்றத்திற்கு வருகை தரட்டும் இடைத் தேர்தலில் கூட நாங்களே அவரை வெற்றி பெறச்செய்து எம்.எல்.ஏ.வாக ஆக்குகிறோம்.

இந்த இயக்கத்தை அழிக்க முடியாது!

இல்லையென்றால் பா.ஜ.க.வில் சேருங்கள் உங்களை அவர்கள் மந்திரியாக்கி விடுவார்கள். ஆளுநரிடம் நாங்கள் வம்பு செய்ய விரும்பவில்லை யாருக்காக இப்படியெல்லாம் பேசுகிறீர்கள் என்பது எங்களுக்கு தெரியும்.கொள்கைக்காக பாடுபடுகிறோம்,பேரறிஞர் அண்ணா வளர்த்த மண், கலைஞர் உருவாக்கிய மண்,கண்ணியத்திற்கு பேர் போன மண், எங்களைப் பொறுத்தவரை மக்களுக்கு கொடுத்த வாக்குறுதி நிறைவேற்ற வேண்டும். அறிவித்த திட்டங்களை நாங்கள் நிறைவேற்று வதற்காக பாடுபடுகிறோம். மகத்தான சொத்து மாபெரும் தலைவர் தளபதி ஆவார். மக்களுக்கு உரிய உரிமைகளை வாங்கி கொடுத்த இயக்கம். இந்த இயக்கத்தை அழிக்க நினைத்தால் நடக்காது. இந்த இயக்கத்தை அழித்துவிடலாம் என எத்தனையோ பேர் கணக்கு கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இளைஞர்கள் இருக்கும் வரை இந்த கட்சியை அழிக்க முடியாது. நூற்றுக் கணக்கான துரைமுருகன்கள் வந்து கொண்டே இருப்பார்கள்.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர்-அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

ஜெகத்ரட்சகன் எம்.பி.பேச்சு!

கூட்டத்தில் மாநில கொள்கைப் பரப்பு செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி. பேசியதாவது.

200 ஆண்டுகளில் செய்யக்கூடிய சாதனையை இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் செய்து காட்டியுள்ளார்.பல விமர்சனம் இந்த ஆட்சியில் இருந்தாலும், எதையும் பொருட்படுத்தாமல் முதலமைச்சராக செயல்பட்டு வருகிறார்.இந்தியாவின் அனைத்து பொறுப்புகளுக்கும் மேலான உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திர சூட்டிற்கு தெரிந்துள்ளது,தமிழகம் அமைதி பூங்காவாக திகழ்கிறது. ஆனால் தமிழகத்தில் இருக்கும் ஆளுநருக்கு தெரியவில்லை. காமாலை கண்ணனுக்கு மஞ்சளும் கரித்தூளாகத் தான் தெரியும்.திராவிட மாடல் என்பது ஒன்றுமில்லை என ஆளுநர் சொல்கிறார்.திராவிடம் என்பது இயேசு பிறப்புக்கு முன்பே இருந்துள்ளது என இந்த மண்ணில் வாழ்ந்த கால்டுவெல் சொல்கிறார்.கவர்னர் சொந்த ஊரான பீகார் மாநிலம் மட்டும் அல்லாது வட மாநிலத்தவர்கள் சந்தோஷமாக இருக்கும் வகையில் தமிழகத்தில் சிறப்பான ஆட்சி நடக்கிறது. முதலமைச்சர் ஆட்சியில் தமிழகத்தை இயந்திரலோகமாக மாற்றி உள்ளார். எங்கு பார்த்தாலும் தொழிற்சாலைகள் உருவாகியுள்ளது. முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதால் வட நாட்டின் பல கோயில்களில் அவரை உள்ளே அனுமதிக்கவில்லை.அங்கு திராவிடத்தின் ஆட்சி நடக்கவில்லை என்பதனால் தான் அந்த நிலை இருந்தது.

இவ்வாறு ஜெகத்ரட்சகன் எம்.பி. பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் முருகன், தர்மன்,மாநகர கழக நிர்வாகிகள் அப்துல்கையூம், அண்ணாதுரை, அலிப்மீரான் மாவட்ட பிரதிநிதிகள் கார்டன் சேகர், வெங்கடேஷ், முகமது அலி, இசக்கிபாண்டியன், சுரேஷ், மாநகர பிரதிநிதிகள் சிவசுப்பிரமணியன், பிரான்சிஸ், மணி, கண்ணன், நெல்லை பகுதி வட்டக் கழக செயலாளர் வேல்முருகன், செந்தில் முருகன், பெப்சி சரவணன், தச்சை பகுதி கிருஷ்ணன், சிந்து முருகன், சடாமுனி, பாபகுமார், பாளை பகுதி ஆவின் கல்யாணி, பத்ம ராஜ், சுடலை ராஜ்,பாஸ்கர்,கதிரேசன்,மேலப்பாளையம் பகுதி ராபர்ட் செல்லையா, செல்வகுமார்,காஜாமுகைதீன்,பாலகிருஷ்ணன், இசக்கி, எல் ஐசி பேச்சிமுத்து,மாமன்ற உறுப்பினர்கள் நித்திய பாலையா, சுந்தர், உலகநாதன்,உள்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் 27 ஆவது வார்டு செயலாளர் கேபிள் குமரேசன் நன்றி உரையாற்றினார்.

தேனி வடக்கு மாவட்டம் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி மேற்கு ஒன்றியத்தில் கழக தலைவர்–தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் போடி முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும், ஒன்றிய கழக செயலாளருமான எஸ்.லட்சுமணன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர்,தங்கதமிழ் செல்வன் சிறப்புரையாற்றினார். உடன் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஈராண்டு சாதனை விளக்க மலரினை வெளியிட்டு

520 பயனாளிகளுக்கு ரூ.90.76 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லப்பாண்டியன் வழங்கினர்!

புதுக்கோட்டை, மே 12-

புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலக கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் மாதாந்திர உதவித் தொகை ரூ.1000 வழங்குவதற்கான ஆணைகளை வழங்கும் விழா, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் "தமிழ்நாடு அரசின் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி" என்ற தலைப்பில் ஈராண்டு சாதனை விளக்க மலரினை வெளியிட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை 09.05.2023 அன்று வழங்கினார்கள்.

இவ்விழா மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதாராமு தலைமையில் நடைபெற்றது.

மேலும் இவ்விழாவில் வேளாண்மைத்துறை 10 பயனாளிகளுக்கு ரூ.5.44 லட்சம் மதிப்பிலும், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.11.05 லட்சம் மதிப்பிலும், மாற்றுத்திறனாளி நலத்துறை 5 பயனாளிகளுக்குரூ.5.27 லட்சம் மதிப்பிலும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 500 பயனாளிகளுக்கு ரூ.69 லட்சம்மதிப்பிலான மாதாந்திர நிதியுதவி ஆக மொத்தம் 520 பயனாளிகளுக்கு ரூ.90.76 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை. முத்துராஜா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ. மதியழகன், மாவட்ட வழங்கல் அலுவலர் ஆர்.கணேசன், வேளாண் இணை இயக்குநர் தபெரியசாமி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், நகர்மன்றத் துணைத் தலைவர் லியாகத் அலி, எம்.எம்.பாலு, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ்.உலகநாதன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் ஒன்றியம் களப்பாகுளம் ஊராட்சி மன்றத் தலைவரும், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள வே.சிவசங்கரி, தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.விடம் வாழ்த்துப் பெற்றார். உடன் சங்கரன்கோவில் ஒன்றிய செயலாளரும் ஒன்றியக் குழு தலைவருமான லாலாசங்கரபாண்டியன் உள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா வி.எஸ். லட்சுமணன்

மே 12 (2009)

இளமைப் பருவம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

திண்டுக்கல் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து 18 ஆண்டுகளும் – திண்டுக்கல் மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சிறுமலை ஊராட்சி மன்றத் தலைவராகவும், திண்டுக்கல் கூட்டுறவு நிலவள வங்கி தலைவராகவும், மாநில கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசாவில் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.